**<u>சார்பு நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்</u>**

**<u>OS.No.125/2023</u>**

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி– 1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கதிரவன் | தகப்பனார் பெயர் | : | முருகன் |
| கிராமம் | : | கௌாப்பாறை | வட்டம் | : | அரூர் |
| தொழில் | : | விவசாயம் | வயது | : | 47 |

<u>Solemnly affirmed/sworn by **Bench Clerk GII,** in accordance with the provisions of Act of 1873, on this the 01st day of June 2026</u>

DW–1

1ம் பிரதிவாதி வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

தாவாவில் நான் 1ம் பிரதிவாதி ஆவேன். எனது முதல் விசாரணையை விரிவாக துவக்கி சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை என் முதல் விசாரணையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் இருக்கும் சங்கதிகள் சரியானவை. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம்தான்.

1. 16.04.2012–ம் தேதியிட்ட வாதிகளால் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலைப்பத்திரம் அரூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1956/2012 சார்பதிவாளர் அலுவலக கணினி நகல் பி.வா.சா.ஆ.1

2. 18.04.2012–ம் தேதியிட்ட வாதிகள் பெயர்களில் தாவா சொத்து பொறுத்து 1ம் பிரதிவாதி எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சார்பதிவாளர் அலுவலக கணினி நகல் பி.வா.சா.ஆ.2

3. 19.04.2012–ம் தேதியிட்ட வாதிகள் பெயர்களில் தாவா சொத்துக்கள் பொறுத்து எழுதப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து ஆவணம் சார்பதிவாளர் அலுவலக கணினி நகல் பி.வா.சா.ஆ.3

4. 03.08.2012–ம்தேதியிட்ட தாவா சொத்து பொறுத்து 2ம் பிரதிவாதி பெயரில் 1ம் பிரதிவாதி எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சார்பதிவாளர் அலுவலக கணினி நகல் பி.வா.சா.ஆ.4

5. 29.06.2024–ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்தின் சிட்டாக்கள் பட்டா எண்.500, 648 கணினி நகல் பி.வா.சா.ஆ.5

6. 01.07.2024–ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்தின் அடங்கல் கிராம நிர்வாக அலுவலரின் சான்று பி.வா.சா.ஆ.6

7. 2ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்தின் அ பதிவேடு கிராம நிர்வாக அலுவலர் சான்று பி.வா.சா.ஆ.7

8. 1ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது பி.வா.சா.ஆ.8

9. 2ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது பி.வா.சா.ஆ.9

மேற்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து கொண்டு தாவா தள்ளுபடியாக வேண்டுகிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.01 15:53:17 +0530